143—

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

***37657—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் கூடுதலாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, செங்கம் தொகுதியில் கூடுதலாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன் அவர்கள்.*

திரு. செ. அருண் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் நான் எதுவும் கேட்காமல் கொடுத்தது என்பது இந்த ஆட்சியில் மட்டும்தான் என்பதையும், நான் இன்றைக்கு நிம்மதியாக இருப்பதற்கும் ஒரே காரணம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தயவுதான் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2015 ஆகஸ்ட் 26]

நேற்று மாண்புமிகு அம்மா அவர்கள் health-conscious ஆக விதி 110-ன்கீழ் Primary Health Centre சம்பந்தமாக அறிவித்தார்கள். நான் ஒரு health-conscious person என்பதாலும், நான் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை health check-up செய்து வருபவன் என்பதாலும் அதனை வரவேற்கின்றேன். தமிழ்நாட்டில் இருக்கிற ஒவ்வொரு மனிதனுக்கும் மிக முக்கியமான ஒன்று health check-up ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய நண்பர் திரு. சுரேஷ்குமார் அவர்கள் செங்கம் தொகுதியில், நீதிமன்றம் அமைப்பது குறித்து கேட்டார். அங்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், என்னுடைய பேராவூரணி தொகுதியில் ஒரு நீதிமன்றம் வேண்டும் என்பது எங்களது நீண்ட நாள் கோரிக்கையாகும். 622 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பேராவூரணி, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பெரிய தொகுதியாகும். பேராவூரணிக்கென தனியாக ஒரு நீதிமன்றம் இல்லை. கிட்டத்தட்ட 30 மற்றும் 40 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் பட்டுக்கோட்டைக்குத்தான் வரவேண்டியுள்ளது. அந்த மக்களுக்கு இது மிகவும் சிரமமாக உள்ளது. 2013 ஆம் ஆண்டில் 400 civil suits-ம், 2000-க்கு மேல் criminal suits-ம் pending ஆக பேராவூரணியில் இருக்கின்றன. பேராவூரணி மக்களுக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இந்த வேண்டுகோளை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. செ. அருண் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் அனைவருக்கும் விரைவில் நீதி கிடைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்பட்டு வருகின்றது. ஜனநாயகத்தின்

தூண்களில் முக்கிய தூணாக விளங்கிக் கொண்டிருக்கும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக புதிய நீதிமன்றங்களையும், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும், நீதிபதிகளுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், மேம்படுத்தவும் இதுவரையில் 401 கோடியே 73 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவண்ணாமலையில் வாடகைக் கட்டடத்திலும், பழுதடைந்த கட்டடத்திலும் போதிய அடிப்படை வசதிகளின்றி 12 நீதிமன்றங்கள் இயங்கி வந்ததைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15 கோடியே 31 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, புதிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டு, 23-8-2014 அன்று திறந்து வைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான பேராவூரணியில் புதிய நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உயர் நீதிமன்றத்திலிருந்து வரும்பொழுது, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கண்டிப்பாக, கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.